EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 47

## சங்க இலக்கியத்தில் வையையின் சிறப்பு

**முனைவர் வெ. முத்துலட்சுமி**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*ஜி.டி.என் கலைக் கல்லூரி*
*திண்டுக்கல் - 05*
*மின்னஞ்சல்: profmuthulakshmiv@gmail.com*

## ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியத்தில் உள்ள வையையின் சிறப்பு குறித்து பரிபாடல் வழியின் மூலம் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. திருவிளையாடற்புராணத்தில் தலவரலாறு எடுத்துரைக்கும்போது வையையின் நீர் மேலாண்மை மற்றும் மதுரை மக்களின் வாழ்வாதாரத்திற்கு இவ்வையை துணைபுரிகிறது. இவ்வையை நீர்வரத்தால் மதுரை மாநகர் மக்கள் மகிழ்வோடு விழா நடத்தும் காட்சியை இலக்கியம் மிக அழகாக எடுத்துரைக்கிறது.

## முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடல் இசைக்குறிப்போடு கூடிய இசைத்தமிழ் நூலாகும். பழைய உரையோடு கூடியதாக இந்நூல் அமைந்துள்ளது. திருமால், செவ்வேள், வையை பற்றியதான இருபத்திரண்டு இசைப்பாடல்கள் இந்நூலுள் உள்ளன. உரைகள் மற்றும் பிறநூல் வழியாகவும், கிடைத்துள்ள சில பரிபாடல்கள், பரிபாடல் திரட்டு என்ற பெயரில் இந்நூல் தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன. முருகன் பற்றி எட்டுப்பாடல்கள் (5,8,9,14,17,18,19,21), திருமால் பற்றி ஆறு பாடல்கள் (1,2,3,4,13,15), வையை பற்றி எட்டுப்பாடல்கள்

(6,7,10,11,12,16,20,22) என இருபத்திரண்டு பாடல்கள் உள்ளன. வையை பற்றிய பதிவுகளை இந்த எட்டுப் பரிபாடல்களின் வழியே காணலாம்.

## வைகை நதி

தென்னிந்தியாவின் தமிழக ஆறுகளில் ஒன்று வைகை. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள பெரியார்பீடபூமியில் தோன்றி வடகிழக்காகப் பாய்ந்து, வடக்கே பழனிக்குன்றுகளாலும் தெற்கே வருசநாட்டுக்குன்றுகளாலும் அரண் செய்யப்பட்டு கம்பம்பள்ளத்தாக்கை அடைகிறது. பின்னர் வருசநாடுகுன்றுகளின் கிழக்கு மூலையை அடைந்ததும், தென்கிழக்காகத் திரும்பி மதுரை மாநகர் வழி பாய்ந்து இராமநாதபுரம்மாவட்டத்தில் வங்காளவிரிகுடாவின் பாக்நீரணையில் கலக்கிறது. ஆற்றின் நீளம் 258 கிலேமீட்டர், பாசனபரப்பு 703 சதுர கிலோமீட்டர் ஆகும். பொதுவாக மழைக்காலத்தில் குறிப்பாக வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் மட்டும் நீர்; இருக்கும். பொதுவாக வறட்சியாக உள்ளது. சுருளியாறு, தேனியாறு, வராகநதி, மஞ்சளாறு முதலியன வையையின் துணை ஆறுகளாகும். பழனி மலையில் உற்பத்தியாகும் வராகநதி கொடைக்கானல் மலையிலிருந்து வரும் பாம்பாற்றுடன் (வெள்ளி அருவியில் உள்ள ஆறு) இணைந்து தேனிக்குக் கிழக்கே குன்னூருக்குத் தெற்கில் வைகையுடன் கலக்கிறது என்று வைகைநதி பற்றி குறிப்புகள் சுட்டுகின்றன.

## திருவிளையாடற்புராணத்தில் வைகை

17ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதிமுனிவரால் படைக்கப்பட்ட மதுரையின் தலவரலாறு திருவிளையாடற்புராணத்தில் அந்தத் தலத்தின் இறைவனான சொக்கநாதப்பெருமானுக்கும் மீனாட்சி எனப்படும் தடாதகைப்பிராட்டிக்கும் நடக்கும் திருமணத்தின் விளைவாக உருவானது வைகை நதி எனப்படுகிறது. கைலாயத்திலிருந்து கிளம்பிய சிவபெருமானாகிய சொக்கநாதப்பெருமானுடன் வந்த தேவர்கள் யாரும் திருமணத்திற்குச் சமைத்த விருந்துணவை உண்ணவில்லை. (ஏனேனில் அமிழ்தம் உண்ட தேவர்களும், கடவுளர்களும் பசியற்றவர்கள்) விருந்துணவு வீணாவதாகத் தடாதகைப்பிராட்டியின் தாய் காஞ்சனமாலை வருந்துகிறாள். தாயின் வருத்தம் தவிர்க்க விரும்பிய தடாதகைப்பிராட்டி தன் கணவனான சொக்கநாதப்பெருமானிடம் (இறைவன்) கூற, அவர் தன்னுடன் வந்த பூதகணங்களுள் ஒன்றான குண்டோதரனை (குடைதாங்கி வந்த பூதம்) அனுப்பினார். ஆவன் எல்லா உணவையும் உண்டு முடித்தும் பசியடங்கவில்லை. இறைவன் அருளால் மண்டபத்தில் தயிர்ச்சோறு பெருகியது. இதுவே அன்னைக்குழிமண்டபம். இவ்விடமே தற்போது பிர்லாமந்திர் எனப் பயணியர் விடுதியாக்கப்பட்டுள்ளது.

பசியடங்கிய குண்டோதரனின் நீர்வேட்கை தணிவதற்கு இறைவன் 'கைவை' என ஆணையிட உருவான நதியே 'வைகை' எனத் தலபுராணம் பேசுகிறது. ஆதற்கேற்பக் காப்பிமரபில் பாண்டிநாட்டுத் தலைநகராக மதுரை இருக்க, நதியாக நெல்லைச்சீமையின் பொருநை பேசப்படுவது எண்ணத்தக்கதாகும். 'வையை' என்ற சொல்லின் இறுதியில் உள்ள 'யகரம்' மக்களது பேச்சுவழக்கில் 'வைகை' எனப்பட்டது.

## நகரநாகரிகமும் நீர்வளமும்

பழங்காலம் முதல் இன்றுவரை நீர்வளமும் நகரவளர்ச்சியும் ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்புடையதாக அமைகின்றமை எண்ணற்குரியதாகும். இதனை 'ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும், அந்த நாட்டு மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கும் காரணமாக இருப்பது அந்நாட்டின் நீர்;வளமே ஆகும்' என்ற கருத்து அரண் செய்கிறது. (இளங்கோவன், எட்டுத்தொகையில் நீர்வளம்' ப.9) அவ்வழி பழந்தமிழ்ப் பாண்டிநாடாகிய மதுரை, காலஇடைவெளி இல்லாத தொடர்ந்த நாகரிகச் சிறப்பும் மேன்மையும் பெற்று இலங்குகிறது. அதற்குக் காரணம் அந்நகர் பெற்ற நீர்;வளமே ஆகும். அதாவது, வையையின் நீர்வளம் மதுரை நகரநாகரிகத்தின் சிறப்பிற்கு அடிப்படையாகிறது எனலாம்.

## வையையின் நீராதாரம்

எல்லா நதிகளும் மழைப்பொழிவையே ஆதாரமாகக் கொண்டவை. மேற்குத் தொடர்ச்சிமலையின் பெரியார்பீடபூமியில் தோன்றுவதாக நிலவியல்ச் சான்றுகள் உள்ளபோதும், வையை வானம் பார்த்த நதியேயாகும். பெரும்பான்மை வறட்சியை உடையதான வையை ஆறு, பழம்பண்hட்டில் நீர்;ப்பெருக்கு உடைய ஆறாக, 'செலவரை காணாக் கடல்தலைக் கூடும் வையைப் புனலாக' (பரி.10:2,8) பெருகிவருகிறது. அப்படிப் பெருகி வரும் நதியின் வளத்திற்கு ஆதாரமாக மழையே பரிபாடலில் சுட்டப்படுகிறது. கடல்நீரை முகந்து நீர்; தரும் வானம் நிலம் மறைவது போல மலை கலங்கப் பொழிகிறது: அப்பொழிவினால் உருவாகும் அருவி, அம்மலையில் உள்ள மான்போன்ற விலங்கினங்கள் கலங்கவும் மலையில் உள்ள மயில்கள் அகவவும், தூசுகள் நீங்கவும் விரைந்து ஒலிக்கிறது. அந்த அருவிநீர்; பலவாறு இணைந்து உழவு முதலிய தொழில்கள் பெருகும்படியாக வையையில் வெள்ளமாகப் பெருகித் தாவிச் சென்றதாம். (பரி. 6:1-10) மற்றொரு பரிபாடலில்,

"திரைஇரும் பனிப் பௌவம் செவ்விதா அற முகந்து

ஊர உரும் உடன்று ஆர்ப்ப, ஊர் பொறை கொள்ளாது" (பரி.7:1-2)

என மழைப்பொழிவினால், வையையில் நீர் வளம்பெற்று வெள்ளமான பான்மை விவரிக்கப்படுகின்றது. மலையில் மாலையில் பெய்த பெருமழையால் காலையில் வெள்ளம் பெருகியமையை,

“முலைவரை மாலை அழிபெயல் - காலை

சேவரை காணாக் கடல்தலைக் கூட” (பரி.10:1-2)

எனப் புலவர் கடும்பிள்ளைப்பூதனார் சுட்டுகிறார். ‘புரைகெழு சையம்பொழி மழைதாழ நெரிதரூஉம் வையைப்புனல்’ (பரி.11:14-15), ‘நளிகடல் முன்னியது போலும், தீம்நீர் வளிவரல் வையை வரவு’ (பரி.12:7-8), ‘கடல் குறைபடுத்த நீர்;கல், குறைபட எறிந்து உடல் ஏறு உருமினம் ஆர்ப்ப, மலைமாலை முற்றுபு, முற்றுபு பெய்து’ (பரி.20:1-3), ‘வண்மைபோல் வானம் பொழிந்த நீர்;, மண்மிசை ஆனாது வந்து தொகுபு ஈண்டி’ (பரி.22:8-9) என எல்லாப் பரிபாடலும் (பரி.16 தவிர) முதல் பகுதியில் மழையே வையையின் நீராதாரமாக அமைவதனை விவரிக்கின்றன.

## வையையில் வெள்ளம்

வையையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் பான்மையைப் பரிபாடல் பலவாறு எடுத்துரைக்கிறது. இரண்டு மலைகள் போல இரு கரைகளிலும் நுங்கும் நுரையுமாக வையை வெள்ளம் பொங்கிப் பெருகுகின்றமையை,

“இறுவரை புரையுமாறு இருகரைஏமத்து

வரைபுரை உருவின் நுரை பல சுமந்து

பூவேய்ந்து, பொழில் பரந்து” (பரி.7:40-42)

எனப் பரிபாடல் சுட்டுகிறது. மேலும், வளர்பிறை நிலவு நாளும் விளகுவது போல வையையின் நீர்;ப்பெருக்கு மலைப்பகுதியின் பக்கம் தொடங்கி நிலமெலாம் பெருகியது: உலகிற்கெல்லாம் பயன் தந்து பாதுகாத்தது என்பதனை,

“ஆநாள் நிறைமதி அலர்தரு பக்கம்போல்

நாளின் நாளின் நளிவரைச் சிலம்புதொட்டு

நிலவுப் பரந்தாங்கு நீர்; நிலம் பரப்பி

உலகு பயம்பகர ஓம்புபெரும் பக்கம்” (பரி.11:30-35)

எனப் பரிபாடல் விவரிப்பதும் வையைவெள்ளத்தின் பெருக்கினைக் காட்டுகிறது. காமம் எல்லையின்றிப் பெருகுவது போல வெள்ளம் பெருகுகிறது

என்ற உவமை வழி உரைப்பதும் வெள்ளத்தின் பெருக்கினைச் சுட்டுகிறது. (பரி.10:69-70) பாண்டியனது போர்க்களம் போல நீரோட்டம் குறைவுபடாது வையை வெள்ளம் மிக்கு ஓடுகின்றமையையும் (பரி.111:60-61) பரிபாடல் காட்டுகிறது. எஞ்ஞான்றும் வல்லதான வையைப்புனல், (பரி.12:75) மலைபோன்று இருப்பதும், மேகங்கள் பெரிய மலையின் மீது படிந்து ஆரவரிக்கும் உடனே அவை பொழிந்த நீர்; வையையில் பாய்வதால், அதன் அலைகள் கரைகளில் மோதி ஒலிக்கும். (12:47-50)

வையையின் நிர்;ப்பெருக்கினால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு மிளகு, சந்தனம், அகில், தந்தம், பொன் முதலிய பொருள்களை அடித்துக்கொண்டு வந்து கரைகளில் வீசி, கரைகளை அழிக்கும். (பரி.16:1-4) கரைகளில் நிறைந்துள்ள சோலைகளில் பெய்த மழையால், பூக்களின் மணம் எங்கும் பரவியது. கோடைவெயிலால் ஆறும் மணலும் கொதிப்புற்றிருந்தது. கார்காலத்தில் மலைமீது பெய்த மழையால் ஆற்றில் வெள்ளம் வந்தது. அவ்வெள்ளம் மணத்தோடு இருந்தது என்ற குறிப்பு பிறிதொரு பரிபாடலில் (பரி.20:1-3) இடம்பெறுகின்றது. அவ்வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதனை ஊர்கள்தோறும் பறையினை அறைந்து ஒலியெழுப்பி அறிவிப்பதனை,

“மாடல் மறுகின் மருவி மறுகுறக்

கூடல் விழையும் தகைத்துத் தகைவையை” (பரி.20:25-26)

எனவும் பரிபாடல் பதிவுசெய்கிறது.

## வையைக்கரை உடைப்பும் அடைப்பும்

வையை நதியின் நீர்பெருக்கினால் கரை உடைந்தமையையும் அதற்காக மக்களை அழைத்து கரை அடைக் பாண்டியன் ஆணையிட்ட செய்தியம் திருவிளையாடல்புராணத்தில் தொன்மக்கதையாவதனை அறிவோம். வையையின் புனல் பெருக்கினால், கரை உடைவதும், காவலர்கள் மக்களுக்கு அதனை அறிவித்துக் கரை அடைக்க அழைப்பதுமான செயல்கள் பரிபாடலில் இடம்பெறுகின்றன.

“வரைச் சிறை உடைத்ததை வையை: ‘வையைத்

திரைச் சிறை உடைத்தன்று கரைச்சிறை அறைக’ எனும்

உரைச் சிறைப் பறை எழ, ஊர் ஒலித்தன்று” (பரி.6:22-24)

என்ற பரிபாடல் குறிப்பு, வையையின் கரை வெள்ளத்தால் உடைந்தது என்பதனையும், அதனை மக்களிடம் தெரிவிக்கப் பறை அடித்து அறிவிப்பார்கள் என்பதனையும், அதனை அடைக்க மக்கள் வரவேண்டும் என்பதனையும்

உணர்த்துகிறது. திருவிறையாடற் புராணத்தில் இடம்பெறும் வெளித்தடக்கை மதயானைமந்திரிகள், வேறு வேறு பல குடிகளும், குறித்தெடுத்தெழுது எல்லையிட்டளவு கோல்கிடத்தி வரை கீறியே, அறுத்து விட்டு நகர் எங்கணும் பறை அறைந்து அழைத்துவிடு மாளெல்லாம், செறித்து விட்டவாவர்க்கு அளந்தபடி செய்மின் என்று வருவித்தனர் (திருவிளை.61:3) என்ற குறிப்பும், 'மன்ற திகழ்தென் கரைகடந்து மதுரை நகருட்புக்ககண்டு, துன்று மிரலிற் பறையறெயுஞ் சும்மை கேட்டு' என்ற திருவாலவாயுடையார் திருவிளையாடல் குறிப்பும் பரிபாடல் வழிவந்தவையே ஆகும்.

## வையையும் கடலும்

வையையின் நீர் கடலில் சென்று கலப்பதில்லை என்பது உண்மை! அதற்குக் காரணம் அதன் நீர்வரத்தின் குறைவே ஆகும். ஆனால் பிற்காலத் தனிப்பாடலில் வையையின் மருமகனான சொக்கநாதப்பெருமானுக்கு கடல் நஞுடசளித்தமையால், கோபம் கொண்ட வையைநதி கடலில் கலக்கவில்லை என்றொரு பாடல் இடம்பெறுகிறது. வையையின் பெருக்கினை,

"நாரிகால் முன்னியதுபோலும் தீ நீர்

வளிவரல் வையை வரவு" (பரி.12-7:8)

என உவமிப்பதும் எண்ணத்தக்கது. ஆனால், காலத்தால் முற்பட்ட பரிபாடல் வையையின் கரைபுரண்ட வெள்ளத்தைக் குறிப்பதோடு, கடலில் அந்நதி சென்று கலக்கும் பான்மையை,

"விரைபிரை விரைதுறை கரையழி பிழியூர ஊர்தரும்புனல்

கரையொடு கடலிடை வரையொடு கடலிடை நிரைநிரை நீர்தரும் நுரை

நுரையுடன் மதகுதொ றிழிதரு புனல்கரை புரளிய செல்லுமறி கடல்

புகுமள வளவியலிசை சிறைதணிவின்ற வெள்ளமிகை" (பரி.திரட்டு.2:67-67)

எனச் சுட்டுகிறது. மேலும், 'இருங்கடற்கு ஊங்கிவரும் யாறென' (பரி.16:27) என்ற குறிப்பும் இங்கு இணைத்து எண்ணத்தக்கதாகும். வையைநதி, இராமநாதபுரம் மாவட்டத்தில் வங்காளவிரிகுடாவின் பாக்நீரணையில் கலக்கிறது என்ற நிலவியல் உண்மை பரிபாடலில் பதிவாகி உள்ளமை புலனாகின்றது. காலத்தின் போக்கில் ஏற்பட்ட மக்கள்பெருக்கத்தால் நதியின் போக்கில் ஆக்ரமிப்புக்கள் ஏற்பட்டன. மேலும், வையை நீர்வளமும் உறிஞ்சப்படுகிறது. இது தற்கால நிலமையாக மட்டுமின்றி, 'தனிப்பாடல்கள்' ஒரு தொகுப்பாகத் தொகுக்கபட்ட காலத்திலேயே நீர்வளம் குறைந்து கடலில்

கலக்காத நிலைமை தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்திற்கு வழிவகுக்கிறது.

## வையை வளமும் மக்கள் கொண்டாட்டமும்

வையையின் நீர்வளத்தால் மதுரைமாநகர் மக்கள் மகிழ்வோடு இருந்தமை பரிபாடலின் பதிவுகள் வழி புலனாகின்றது. இதனை, 'வையைக்குரிய பாடலகளிற புனல் விளையாட்டும் வந்துள்ளன' என்ற கருத்து அரண் செய்கின்றது. (சாமிநாதையர்.உ.வே. முகவுரை, பரிபாடல் ப.5) பெருகும் வைகை வெள்ளத்தைக் கண்ட மக்கள் மகிழ்ச்சியோடு நீர் விளையாட்டுக்குத் தயாராகின்றனர். நூலாலான மிதியடிகளை காலில் அணிந்து கொண்டனர். மேகலை எனும் ஏணிபடுகாலையும் அணிந்து கொண்டனர். இரத்தம் போன்ற நிறத்தினையுடைய சாயத்தண்ணீரை நிரப்பியுள்ள பீச்சாங்குழ்ல் முதலிய கருவிகளையும், முத்துப்போன்ற நிறமுடைய பனிநீர் கலந்த சந்தனக்கலவை முதலிய மணப்பொருள்கள் அடங்கிய பெட்டிகளையும் எடுத்துக் கொண்டனர். குதிரைகள், பெண்யானைகள் பெயரிட்டு அழைக்கப்படும் எருதுகள் பூட்டிய வண்டிகள், கழுதைகள், குதிரைகள் பூட்டிய வண்டிகள் முதலியவற்றில் ஏறிக்கொண்டு மக்கள் விரைந்து வையை நதியை அடைந்தனர் (பரி.10-9:18). இவ்வாறான விளையாட்டில் மதுரை மக்கள் பீச்சாங்குழல் நீரில் மூழ்காமல் இருத்தற்கு வாழைத்தண்டைப் பயன்படுத்தியமை முதலிய பல செய்திக்ள தெரியவருகின்றன.

'அம்பி' எனும் படகில் ஏறி வெள்ளத்தில் விளையாடும் செயலையும் (பரி.6:75) பரிபாடல் சுட்டுகிறது. மேலும், கடல் பெருகியது போன்ற வையைப் பெருக்கில் நீர்விளையாட பல்வேறுபட்ட மக்கள் ஆயத்தமாகின்றனர். மதுரையின் மதிலை மோதும் வையையின் பெருக்கினைக் கேட்டு, மின்னவிர் ஒளி உமிழ் அணி அணிந்த மங்கையரும், பொன்பூ அணிந்தவர்களும், அகில், சந்தனம் பூசியவர்களும், கரியகுழலை முடிந்தவர்களும், வெட்டிவேர் இடையிட்ட மலர்ச்சரத்தைச் சூடியவர்களும், அழகிய சேலைகளை அணிந்தவர்களும், மாலை அணிந்தவர்களும், நறுமணம் மிக்கத் தைலம் அணிந்தவர்களும், அழகுமிக்கவர்களும், வாசம்மிக்க பாக்கினை மென்றபடி சிலரும், வளையல் தோள்வளை அணிந்தவர்களும், கட்டுவடம், காலாழி அணிந்தவர்களும், மாலை ஒருயோசனைதூரம் வாசனை வீசுமாறு பூச்சுக்கள் அணிந்தவர்களும், குதிரையேறிச் சில பெண்களும், பெண் யானைகளில் ஏறிச் சிலபெண்களும், விரைந்து செல்லும் குதிரையில் ஏறிய ஆண்கள் சிலரும், ஆண் யானையில் ஏறிச் சில ஆண்களும், மணிகள் ஒலிக்கும் தேரில் ஏறிச் சிலரும் எனப் பலவாறு நீர்விளையாடல் கொண்டாட்டத்திற்குக் கிளம்பும் பலதரப்பட்ட மக்கள் கூட்டத்தைப் பரிபாடலின் பகுதிகள் காட்சிப்படுத்துகின்றன (பரி.12-9:29).

பிறிதொரு பரிபாடலில் துவர்ப்பொருள்கள் ஊறிய மணம் ஊட்டப்பட்ட நீர், புகைப்பதற்கு உரிய அகிற்கட்டை முதலியவை, சந்தனக்குழம்பு, விளையாட்டாகப் பிறர்மீது வீசுவதற்கும் பீய்ச்சுவதற்கும் உரிய நீர் விளையாட்டுக் கருவிகள், நீர் விளையாட்டிற்கு ஏற்ற அணிகள் அழகிய மெல்லிய ஆடைகள் முதலியவற்றை ஏந்திப் பணிப்பெண்கள் பின்தொடர, விலங்குகளின் மீதும், வாகனங்களின் மீதும் ஏறி மக்கள் வையை நதியை அடைந்தமையை பரிபாடல்வழி அறியமுடிகிறது (பரி.22-17:25). ஆண்கள் தம் மனைவியரோடும், காதற்பரத்தை, இற்பரத்தை முதலியவர்களோடு புனல் விளையாட்டில் ஈடுபடுவதும், ஒருவரோடு விளையாடும் போது, பிறிதொருவர் ஊடல் கொள்வதுமான பதிவுகளும் வையை பற்றிய பரிபாடல்கள் வழி புலனாகின்றது.

## வளமும் மக்கள் வாழ்வும்

நீர்வளம் மிக்க வையைப்புனல் அம்மக்களின் ஆட்டபாட்டங்கள் விளையாட்டுக்கும் மட்டுமல்ல: ஆதாரமான உழவுக்கும் உரியதாக இருந்தமை இன்றியமையாத குறிப்பாகும். சோலைகளிலும் மணம்மிக்க நரந்தம் புற்களிலும் பாய்ந்து வரும் வையை வெள்ளம், உழவர் மகிழ்வுடையப் பெருகியது (பரி.7-11:17) என்ற குறிப்பின்வழி உணரமுடிகின்றது. பழன உழவர்கள் மகிழுமாறு வையையின் புனல் பரந்து விரிந்து பெருகுகிறது என்ற குறிப்பும் இணைத்து எண்ணத்தக்கது (பரி.7:39). மேலும்,

"பெயலால் பொலிந்து பெரும்புனல் பலநந்த

நலனந்த நாடணி நந்தப் புலனந்த

வந்தன்று வையைப் புனல்" (பரி.7-8:9)

என அருவிநீர் மழையால் மிகுந்து, வையை பெருக உயிர்களுக்கு நன்மை மிகுந்து நாடு அழகு பெற்றமையையும், வயல்கள் வளம் பெருகியமையையும் பிறிதொரு பரிபாடல் சுட்டுவதும் எண்ணற்குரியது. இத்தகு வளத்திற்குக் காரணமாக இருப்பதனால் நீராட வந்த மகளிர் எல்லாம்,

"நத்தொடு நள்ளி நடையிறவு வளவாளை

வித்தி அலையில் விளைக பொலிக என்பார்" (பரி.10-85:86)

என வையையின் நீர்ப்பெருக்கில் பொன்னால் செய்யப்பட்ட சங்கு, நண்டு, இறால், வாளைமீன் முதலியவற்றை வீசி, விளைபொருள்கள் விளைக! நாடு வளமுற்றுப் பொலிக! என வாழ்த்துவதும் வையையின் நீர்ப்பெருக்கு மதுரையின் வளத்திற்குக் காரணமாவதனைக் காட்டுகின்றது எனலாம். இத்தகைய

வளத்திற்கு அடிப்படையான வையையின் நீர்ப்பெருக்கில் நீராடும் வாய்ப்பு மறுபிறப்பிலும் எமக்கு வாய்க்க எனப் போற்றி வாழ்த்துகின்றனர் பெண்கள் (பரி.11-138:140). இவ்வாறு மதுரையின் நீர்வளத்திற்கு வையைநதி பலவாறு ஆதாரமாக அமைகின்றமையைப் பரிபாடல் புலப்படுத்துகிறது.

## வையையின் நீர் மாசடைதல்

வையையின் நீர்ப்பெருக்கின் ஒலி சுருங்கை வழியாகக் கேட்டு மக்கள் விழித்தெழுந்து நீராட விரைக்கின்றனர். அவர்தம் நீராட்டத்தால், வையை நீர் கலங்கிக் காணப்படுகின்றது. 'நாளும் தெளிவின்று தீர் நீர்ப் புனல்' (பரி.10

:110) என்ற தொடர் கலங்கிய வையை நீரைக் குறிப்பிடுகிறது. புனல்விளையாட்டில் இடும் புகை நீரோடு கலந்தமையை, 'உள்நின்று தூய பனிநீருடன் கலந்த, கால் திரிய ஆர்க்கும்புகை' (பரி.10:125) என அமையும் குறிப்புக்கள் எண்ணற்குரியன.

## முடிவுரை

திருமருத முன்துறை எனப்படும் மதுரையின் நீர்வளம் அந்நகரில் ஓடும் வையைநதியால் அமைகிறது. அதனை, பரிபாடலில் அமையும் வையைப்பாடல்கள் விவரிக்கின்றன. மழையும் மலையின் அருவிகளும் வையையின் நீர்பெருக்கிற்கு ஆதாரமாகின்றன. மாலையில் மழை பெய்து காலையில் வெள்ளம் பெருகியது. ஆக்கிரமிப்புகள் இல்லாத அக்காலத்தில் வையை கடலில் கலப்பதும் பரிபாடலில் பரிவாகியுள்ளது. மக்களது பலதரப்பட்ட புனல் விளையாட்டுக்குக் களனாகும் வையை உயிர்களின் பெருக்கத்திற்கும் உழவர்களின் விளைச்சருக்கும் இடமளிக்கும் தனமையைப் பரிபாடல் வழி அறியமுடிகிறது. மக்களது புனல் விளையாட்டுக் கொண்டாட்டங்களால் நீர் மாசடைவதனையும் அறியமுடிகிறது.

## அடிக்குறிப்பு


1. இராமநாதன் செட்டியார்.மி.பொன்.(உ.ஆ), பரிபாடல், அருணா பப்ளிகேசன்ஸ், 1963
2. இளங்கோவன், எட்டுத்தொகையில் நீர்வளம், எட்டுத்தொகையில் இயற்கைவளம், நிர்மலா மகளிர் கல்லூரி வெளியீடு, கோவை, 2015
3. சுமிநாதையர்.உ.வே., (ப.ஆ)., பரிபாடல், 1980
4. பட்டுச்சாமி ஓதுவார்.தி., (ப.ஆ)., திருவிளையாடற்புராணம், காசிமடம் வெளியீடு, 1951
5. பரிபாடல், மர்ரே ராஜம் பதிப்பு, 1957.